## பத்திரிக்கை குறிப்பு

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை செங்கல்பட்டு பிரிவு அலுவலகத்தை அணுகி, தான் தன்னுடைய நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்வதற்கு செங்கல்பட்டு மாவட்டம், திருவாஞ்சேரி கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திருமதி.தீபா, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திருமதி.தனலட்சுமி, கிராம உதவியாளர், திருவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம், அவர்கள் தங்களுக்கு ரூ.13,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 27.04.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.தீபா, கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் உத்தரவுபடி திருமதி.தனலட்சுமி, கிராம உதவியாளர் புகார்தாரரிடமிருந்து ரூ.13,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Chengalpattu Detachment, and gave complaint that he had applied for patta name transfer for her land at Thiruvenchery VAO Office, Chengalpattu District, for which Tmt.Deepa, Village Administrative Officer and Tmt.Dhanalakshmi, Village Assistant, Thiruvenchery, Chengalpattu district demanded Rs.13,000/- as bribe for processing her application. In this connection a case was registered and a trap was organized today 27.04.2022.

During trap proceedings, on the instruction of Tmt.Deepa, Village Administrative Officer, Tmt.Dhanalakshmi, Village Assistant, received the bribe amount of Rs.13,000/- from the complainant. Both accused were arrested.